மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழித்துறையில், அருமனை குழித்துறை சாலைக்கு ஒரு மாற்று சாலை அமைக்கும் செயற் குறிப்பு தற்பொழுது இல்லை.

திரு. என். டென்னிஸ் : மழை காலங்களில் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால் அதன் அவசியம் மிகவும் அதிகமாக ஆகிறது. ஆதலால் அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த மாற்றுச் சாலை அமைப்பதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : குழித்துறைத் தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸ், நீதி மன்றங்கள், பல பொது காரியாலயங்கள் உள்ள இடமாகும். மழை காலங்களில் இந்த ரோடில் வெள்ளம் நிரம்பிவிடுகிற காரணத்தினல் பொது மக்கள் இந்த அலுவலகங்களுக்குச் செல்வ தற்கு வழி இல்லாமலிருக்கிறது. எனவே இதன் அவசியத்தை உணர்ந்து ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒத்திவைக்காமல் நமது நிதி ஆண்டுத் திட்டத்தில் உட்படுத்திச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி கேட்கப் பட்டிருப்பது பை பாஸ் பற்றி. அதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது, அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஊருக்குச் செல்லும் சாலையைப் பொறுத்தவரையில் துணை மேம் பாட்டுப்பணிகளை அரசு செய்யும்.

ஆயக்காரன்புலம் கூட்டுறவு விவசாய வங்கி.

* 134 வின.—திரு. மா. மீனட்சிசுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆயக்காரன்புலம் கூட்டுறவு விவசாய வங்கி கலைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1972 டிசம்பர் 12]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) இந்த வங்கியில் 1965–66-ல் ஏற்பட்ட முறை கேடு காரணமாக அது கலேக்கப்பட்டது.

திரு. மா. மீனுட்சிசுந்தரம் : மீண்டும் அந்தக் கிராமத்தில் கூட்டுறவு நாணயச் சங்கத்தை அமைக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கம் இப்போது லிக்விடேஷனில் இருக்கிறது. அதற்குப் பதிலாக புதிய வேறு சங்கம் அமைப்பதுபற்றித் தக்க நேரத்தில் பரிசிலனே செய்யப்படும்.

திரு. த. சோனேயா : நிலவள வங்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று அமைக்கப்படும் என்று முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்னும் சில ஊராட்சி ஒன்றியங்களில் நிலவள வங்கி அமைக்கப்படவில்லே. அவை மீண்டும் தொடர்ந்து அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கிட்டத்தட்ட எல்லா ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், ப்ளாக்குகளிலும், நிலவள வங்கி அல்லது நிலவள வங்கியின் கிளேகள் திறக்க அரசு ஆணேயிட்டிருக்கிறது.

Agro-Engineering and Service Co-operative Centre, Thandarampet

* 135 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether an Agro-Engineering and Service Co-operative Centre has been introduced in Thandarampet in North Arcot district during April 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) இந்தக் கூட்டுறவுக் கழகம் வேலேயில்லாத என்ஜினியர்களுக்கு வேலே கொடுப்பதற்காக மத்திய அரசு திட்டப்படி தொடங்கப்பட்டது. தெளிப்பான்கள் மற்றும் வேளாண்மை இயந்திரங்களேப் பழுதுபார்ப்பது கிணறு வெட்டி பம்ப்செட்ஸ் அமைப்பது ஆகிய பணிகளே இந்தக் கூட்டுறவுக் கழகம் செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS